# சென்ட்ரல் மெட்ரோவில் இசை நிகழ்ச்சி



சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று நடந்த, 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' குழுவினரின் இசை நிகழ்ச்சி.

சென்னை, பிப். 17–

சென்னை, மெட்ரோ நிலையத்தில், 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ் காலாசாரம், பாரம்பரியத்தை கொண்டாடும் நோக்கில், சென்னையில் உள்ள, பல்வேறு இசை கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் சேர்ந்து, மெட்ரோ நிலையங்களிலும், ரயில்களிலும், தமிழ் கலாசார இசை, நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, வடபழநி மெட்ரோ ரயில் நிலையத்தில், நேற்று மாலை, 4:00 மணியில் இருந்து, 6:00 மணி வரை, சத்ய சாய் சேவா அமைப்பின் சார்பில், பாலா விகாஸ் நாடக குழுவினரால், சமூக விழிப்புணர்வு மற்றும் ஒரு குடிமகனின் பொறுப்பு ஆகியவற்றை விளக்கும் நோக்கில், 'பாலா விகாஸ்' என்ற பெயரில் நாடகம் நடத்தப்பட்டது.

இதன்பின், சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், மாலை, 6:30 மணியில் இருந்து, இரவு, 8:30 மணி வரை, 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது. ஆயிரக்கணக்கானோர் பார்த்து ரசித்தனர்.